## சுருக்கம்

சட்டக்கல்வி – 2017 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்ளும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு, தலா ரூ.75,000/– வீதம் ரூ.5,25,000/– செலவினம் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சட்ட (சக)த் துறை

அரசாணை (நிலை) எண். 71

நாள் 20.03.2017
துன்முகி ஆண்டு, பங்குனி –07
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

சட்டக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.3104/அ3/2016, நாள் 09.01. 2017.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் 7 மாணவர்கள், ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ள அக்கல்லூரியில் தெரிவு செய்யப்பட்டுள்ளபடியால், 26.03.2017 முதல் 02.04.2017 வரை ஹாங்காங்கில் நடைபெற உள்ள போட்டியில் கலந்து கொள்ள தேவையான செலவு தொகை மூன்று மாணவர்களுக்கு மொத்தம் ரூ.4,83,000/– (பதிவுக் கட்டணம் உட்பட) மற்றும் 08.04.2017 முதல் 13.04.2017 வரை வியன்னாவில் நடைபெறவுள்ள மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்து கொள்ள தேவையான செலவு தொகை நான்கு மாணவர்களுக்கு மொத்தம் ரூ.8,12,000/– (பதிவுக் கட்டணம் உட்பட) ஆக மொத்தம் 7 மாணவர்களுக்கு ஆகும் மொத்த செலவு, ரூ.12,95,000/– (ரூபாய் பனிரெண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) நிதியுதவி வழங்கிடுவது தொடர்பாக பரிசீலித்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. சட்டக் கல்வி இயக்குநர் அவர்களின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்த அரசு, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் கீழ்க்கண்ட ஏழு மாணவர்களுக்கும், (ஒரு மாணவருக்கு தலா ரூ.75,000/–(ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வீதம்) மொத்தம் ரூ. 5,25,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்), அவர்கள் 2017–ஆம் ஆண்டு ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற உள்ள சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொள்ளும் வகைக்காக, அதாவது, போக்குவரத்து, உணவு மற்றும் இருப்பிடம் போன்றவைகள் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது:–

| | | |
|---|---|---|
| (1) | அபர்ணா சுந்தர் . பி | 5 ஆம் பி.ஏ.பி.எல். |
| (2) | ருக்மணி வேணுகோபாலன் | 5 ஆம் பி.ஏ.பி.எல். |
| (3) | ஹேமலதா.ட்டி | 4 ஆம் பி.ஏ.பி.எல். |
| (4) | லாவனேஷ்.ட்டி.எஸ் | பி.எல். (ஆறாம் பருவம்) |
| (5) | கிரிஷ்.எஸ் | 2 ஆம் பி.ஏ.எல்.எல்.பி |
| (6) | நாசீர் உசேன்.என்.ஏ | 1 ஆம் பி.ஏ.எல்.எல்.பி |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 – பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் – 103. அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – I. திட்டத்தில் சேராதது – AE சட்டக் கல்லூரிகள் – 09. உதவித் தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (கு.தொ.கு. 2202–03–103–AE–0914)".

4. இதற்கான நிதி 2016–2017–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன மாணவர்களுக்கு உரிய தொகையினை பெற்று அளித்திடுவதற்கு சட்டக் கல்வி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேற்சொன்ன மாணவர்களுக்கு உரிய தொகையினை பெற்று வழங்கியபின், அம்மாணவர்கள் போட்டிக்குச் சென்று வந்த பிறகு அவர்களிடமிருந்து செலவுச் சீட்டு பெற்று, பட்டியை (Bills) சரிசெய்யுமாறும் சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், அம்மாணவர்கள் போட்டியில் கலந்துகொண்டு இந்தியா திரும்பிய பிறகு அப்போட்டியின் உபயோகம் குறித்தான அறிக்கையினைப் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.10913/உள்–II/2017, நாள் 07.03.2017–இல் பெறப்பட்ட அதன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர் (பொ).

<u>பெறுநர்:</u>

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. முதல்வர், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை – 600 104. (சட்டக் கல்வி இயக்குநர் வழியாக).
3. தனி நபர்கள் (சட்டக் கல்வி இயக்குநர் வழியாக).
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை –600 035.
5. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 104.

<u>நகல் :</u>

1. மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. நிதி( உள்–II)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018 / 600 035.
4. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

<u>இருப்பு கோப்பு/ உதிரி.</u>

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20/3/17